நல்லூர் ...
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 96 பிரசோற்பத்தி மாசி 19 ( 02. 03. 1992 ) திங்கள்

## ஹோட்டல்களை ஏமாற்றிய பாலஸ்தீனப் பிரஜை கைது

ஹோட்டல்களின் வாடகைப் பணம் 5 லட்சம் ரூபா வைச் செலுத்தாது ஏமாற்றிவந்த பாலஸ்தீனப் பிரஜை ஒருவர் பாணந்துறை பொலிஸாரால் கைது செய்யப் பட்டார். இவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற பெயரில் பலரிடம் பணம் மோசடி செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. பாணந்துறை நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டபோது இவரை பிஸ்கால் காவலில வைக்குமாறு உத்தரவிட்டார். இவர் விஸா இன்றி இலங்கையில தங்கியிருந்தார் எனவும் பொலிஸார் நீதிமன்றத்தில தெரிவித்தனர் சுமார் ஐந்து ஹோட்டல்களில இவர் தங்கியிருந்து வாடகைப் பணத்தைச்

—06 ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவு காவல் நிலைகள் மீது

# ஐந்து நிமிட வேகத்தாக்குதல்

## சின்ன உப்பளம் படையினரின் நிலைகள் அழிப்பு

**ஆனையிறவு சின்ன உப்பளம் பகுதியில் இருந்த படையினரின் காவலரண்கள் இரண்டு நேற்று புலிகளின் தாக்குதலில் தகர்க்கப்பட்டன. இதில் இரண்டு படையினர் கொல்லப்பட்டனர். பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

நேற்று அதிகாலை 12 40 மணியளவில் ஆனையிறவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள சின்ன உப்பளம் பகுதியில் அமைந்த படையினரின் கண்காணிப்பு அரண்கள் மீது புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

ஐந்து நிமிடங்களே நீடித்த தாக்குதலை தொடர்ந்து படையினரின் இரு அரண்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இவை பின்னர் முற்றாக புலிகளால் அழிக்கப்பட்டது காவலரணில் இருந்த படையினரில் இருவர் பலியாகினர் ஏனையோர்த பியோடிவிட்டனர் காவலரண்களிலிருந்து ஆயுதங்களும் மற்றும் இராணுவ சாதனங்களும் மீட்கப்பட்டன.

இத்தாக்குதல் குறித்து ஊர்ஜிதப்படுத்திய பாதுகாப்பு வட்டாரங்கள் புலிகள் ரொக்கட் ஏவுகணைகளை உபயோகித்ததாகவும் தெரிவித்தன. (10. 08)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

- ரி-56 -2
- மகசீன் -9
- ரி.81 மகசீன் -05
- ஐ.எம். ரவைகள் -1778
- தண்ணீர்க் கான் -03
- மொபைல் செற் -01
- சப்பாத்து -02 சோடி
- ஜே.ஆர். கைக்குண்டு -04
- கிளைமர் -02
- கிளைமர் அமற்றி -02
- வயர் -02 சுருள்
- மழைக் கவசம் -01
- எ.கே.எல்.எம்.ஜிலிங்-319
- கிட்பாக் -02
- ஏ:கே: கோல்சர் -02
- தண்ணீர்க் கான் கோகிசர் - 03
- தலைக்கவசம் - 2
- பற்றறி - 1

## அகதிகள் வருகின்றனர்

இலங்கைத் தமிழ் அகதிகளின் 131 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 520 அகதிகள் நேற்றுக்காலை இராமேஸ்வரத்திலிருந்து கப்பலில் இலங்கைக்குப் புறப்பட்டனர்

இவர்கள் வட ஆற்காடு தென்னாற்காடு, திண்டுக்கல், அண்ணா மாவட்டங்களின் அகதிமுகாம்களிலும், மண்டபம் அகதிமுகாம்களிலும், தங்கியிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வடமராட்சிப் பகுதியில் கடற் புலிகளுக்கு அஞ்சலி

தாழையடி கடற்பகுதியில் கடற் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த நான்கு கடற் புலிகளுக்கு வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நான்கு கடற் புலிகளின் புகழுடம்புகள் வடமராட்சிப் பகுதியில் பிரதான வீதிகள் தோறும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக பருத்தித்துறை பழைய பஸ் நிலையம், நெல்லியடி பஸ் நிலையம், வல்வெட்டித்துறை சந்தி ஆகிய இடங்களில் விசேட பந்தல்களில் வைக்கப்பட்டிருந்தன

இப் பந்தல்களில் பெருந் தொகையான மக்கள் கடற் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதுதவிர மக்கள் வீதிதோறும் கும்பம் வைத்து இக்கடற் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்

இறுதியில் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் நான்கு கடற்புலிகளின் புகழுடம்புகள் அடக்கம் செய்யப் பட்டன. (10)

## மூதூரில் 14 தமிழர்கள் படையினரால் கைது

மூதூரில் கடந்த 4 நாள்களில் 14 தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூதூர் கிராமங்களை ஒரு மாத கால முற்றுகைக்குள் வைத்த படையினர் தற்போது முற்றுகையை கைவிட்ட போதும் தமது நடவடிக்கைகளை அப்பகுதிகளில் தொடர்ந்தும் நடத்திவருகின்றனர்.

## யாழ். மாவட்டத்திற்கு மின்சாரம் தாமதமாகலாம்

கிளிநொச்சி மாவட்டத்திற்கு மின்சாரம் முழுமையாக வந்ததன் பின்னர் தான் யாழ் மாவட்டத்திற்கான மின்சார விநியோகம் பற்றி அரசுடன் பேச முடியும்.

இவ்வாறு யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அவர் வேலும் கூறுகையில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு எப்படியும் மிக விரைவில் மின்சாரம் கிடைப்பது நிச்சயம் ஆனால் யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மின்சாரம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படலாம் என்றார். (47)

## பலாலிப்பகுதியில் அதிகாலை ஹெலி சூடு

நேற்று அதிகாலை 3 மணியளவில் பலாலியை அடுத்துள்ள கிராமங்களில் ஹெலி ஒன்று சரமாரியாக கலிபர் தாக்குதலை மேற்கொண்டது

பின்னர் பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் கட்டுவன் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 47

## பருத்தித்துறையில் ஹெலி சூடு

நேற்று காலை 9. 20 மணியளவில் பருத்தித்துறை கடற் பிராந்தியத்தில் ஹெலிக்கப்

—06 ஆம் பக்கம் பார்க்க

## தாழையடி கடல் மோதல்

## விடுமுறை முடித்து திரும்பிய படையினரே தாக்கப்பட்டனர்

கடந்த வெள்ளியன்று தாழையடி கடற்பகுதியில் கடற்புலிகளின் தாக்குதலுக்குள்ளான படையினர் விடுமுறைக்கு சென்று வீட்டு கடமைக்கு திருமபிக்கொண்டிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது

விடுமுறையில் சென்ற இந்தப்படையினர் காங்கேசன் துறை திரும்பி அங்கிருந்து கடற்படை படகு மூலம் வெற்றிலைக்கேணிக்கு வந்து கொண்டிருந்ததாக கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## எய்ட்ஸுக்கு ஒருவர் மரணம் மற்றவர் ஆபத்தான நிலை

எயட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த மற்றுமொரு இலங்கையர் கடந்த வெள்ளிக்கிழமை மரணமானார்.

மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் உள்ளார் என்றும் எய்ட்ஸ்கட்டுப்பாட்டுத்திட்ட பணிப்பாளர்டாக்டர் காமினி ஜெயகுரு தெரிவித்தார்.

## தமிழர் வென்றார்

இத்தாலியில் மசிசா எமிலியோ எனும் நகரில் நடைபெற்ற உலகக் கோப்பைக்கான செஸ் போட்டியில் இந்தியத் தமிழரான விசுவநாதன் ஆனந்த் என்பவர் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார்

## விமானத்தாக்குதல் மத்தியில்

## கருவேப்பங்குளத்தில் புலிகள்-இராணுவம்மோதல்

வவுனியாவில் பரணிக்குளம் பகுதியிலிருந்து படையினர் ஈச்சங்குளம் நோக்கி முன்னேறினர் இப்படையினரை கருவேப்பங் குளம்பகுதியில் வைத்து புலிகள் தாக்கினர்.

—06 ஆம் பக்கம் பார்க்க

★ 1982 இல் போன்று தடையை நீக்கவும் கோரிக்கை

# ஜே. வி. பியை மீண்டும் அரசியல் கட்சியாக மாற்ற

## தலைவர்கள் தீவிர முயற்சி

ஜே. வி. பி. இயக்கம் தனது அமைப்பை அரசியல் கட்சியாக மீண்டும் உருவாக்கும் முயற்சியில தற்போது ஈடுபட்டு வருவதாக சிங்கள தினசரியான லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.

அரச படையினரால் கொல்லப்பட்ட இயக்கத்தின் ஸ்தாபகர் ரோகண விஜேவீரவின் மைத்துனரான டொக்டர் சந்திர பெர்ணான்டோ இது குறித்து அமைப்பின் தற்போதைய தலைவராக இருக்கும் சோமவன்ச அமரசிங்கவை சந்திக்க லண்டன் செல்லவுள்ளார்.

—06 ஆம்பக்கம் பார்க்க

## அதிகாலையில் ஹெலி கரையோரங்களில் சூடு

நேற்று அதிகாலை 3மணியளவில் யாழ் கரையோரப்பகுதிகளை நோக்கி வட்டமிட்ட ஹெலிக்ஹெப்டர் குடியிருப்பு பகுதிகளை நோக்கி கடும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

நேற்று முற்பகல் வேளையிலும் யாழ்ப்பாணக்கடலில மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி மண்

—06 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்
# 10ஆவது ஆண்டு தின சிறப்புமலர்

1982 **02 - 03 - 1992** 1992

## யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஒரு தசாப்த நிறைவு

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்ப காலங்களில் ஐக்கிய நாணய சங்கங்கள் என்ற பெயரில் உதயமாகி கிட்டத்தட்ட 75 வருட வரலாறு கொண்டதாகும். 1982 ஆம் ஆண்டு வரையில் இச்சங்கங்கள் தனித்தனி அமைப்புக்களாகவே செயற்பட்டு வந்துள்ளன இந்த அமைப்புக்களின் வளர்ச்சிக்கு உற்ற துணையாக கூட்டுறவு வங்கியொன்று அமைக்கப்பட்டு துரித முன்னேற்றம் கண்ட காலத்தில் அதாவது 1972 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் இவ்வங்கி மக்கள் வங்கிக்கு உடமையாக்கப்பட்டு விட்டது. இந்த எதிர்பாரா இழப்பினால் பாதிப்புற்ற இச்சங்கங்களுக்கு நிதி உதவி வழங்க வேறுஎந்த அமைப்பும் முன்வராததினால் இச்சங்கங்கள் வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டன. இந்த வீழ்ச்சி நிலையில் இருந்து இச்சங்கங்களைக் காத்து வளர்க்கும் நல் நோக்குடன் சில கூட்டுறவாளர்கள் முன் வந்து யாழ்ப்பாண மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசத்தை உதயமாக்கி 1982 ஆம் ஆண்டு பதிவு செய்து செயற்படுத்தி வந்தனர் அக்காலம் தொடக்கம் சங்க அங்கத்தவரிடம் ரூ. 10/- வீதம் மாதாந்த சேமிப்பாக நிதி திரட்டப்பட்டு வந்தது.

'சிறுதுளி பெருவெள்ளம் என்ற வாக்கியத்துக்கு அமைவாகவும் சிக்கனமாகவும் சிறுகச் சிறுக சேகரிக்கப்பட்ட பணம் பெருவெள்ளம் போல் திரண்டுள்ளதை இன்று நாம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு 10 ஆண்டுகளில் திரட்டப்பட்ட நிதி இன்று பலலாயிரம் மக்களின் நிதி உதவித் தேவைகளை பூர்த்தி செய்வதாக உள்ளதுடன் பல்லாயிரம் பேருக்கு சுயதொழில் புரியும் வாய்ப்பினை வழங்கக் கூடிய நிலையை உருவாக்கி உள்ளது மட்டுமல்லாமல் அதன் அங்கத்தவர்களுக்கு பல வகைச் சேவைகளையும் ஆற்றக்கூடிய கட்டத்தையும் அடைந்துள்ளது இவ்வாறு யாழ் மாவட்டத்தில் தனது அங்கத்தவர்களுக்குச் சேவையாற்றி வரும் யாழ் மாவட்ட

அ. மை. இராஜகுமார் பி. பி. ஏ.
மாவட்டச் செயலாளர்
யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசம்

சி க கூ சங்கங்களின் சமாசமானது 10 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை இன்று கொண்டாடுகின்றது அள்ள அள்ள வற்றாத அமுதசுரபி போல் தனது அங்கத்தவர்களுக்கு உவந்து அளிக்கும் இச்சமாசத்தின் வளர்ச்சிப் பணியை வாழ்த்துவதில் மகிழ்கின்றோம். பூரிப்படைகின்றோம்.

1982 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2ஆந் திகதி யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசமாக அக்காலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றியவரும் சமாசத்தின் ஸ்தாபகருமாகிய அமரர் திரு. ச, ஞானப்பிரகாசம் அவர்களால் பதிவு செய்யப்பட்டது. இச்சமாசத்தின் ஆரம்ப காலத் தலைவராக திரு. வி. கே சுப்பிரமணியம் அவர்களும், உபதலைவராக திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும் செயலாளராக திரு. இ. திருநாவுக்கரசு அவர்களும், பொருளாளராக திரு டி. வி எம். இராஜசிங்கம் அவர்களும் பணிபுரிந்து வந்தனர். இக்காலகட்டத்தில் 2300 அங்கத்தவர்களுடைய 52 சங்கங்களே சமாசத்தில் அங்கம்வகித்தன. ஆனால் இன்று கடந்த 10ஆண்டு வளர்ச்சியில் 34,000 அங்கத்தவர்களை உள்ளடக்கிய 460 சி க. கூ சங்கங்களை அங்கத்துவமாகக் கொண்ட சமாசமாகப் பிரகாசிப்பதுடன் பெருந்தொகையான மூலதனத்தையும் கொண்டு அறுகுபோல் வேரூன்றி ஆல் போல் தழைத்து வளர்ந்து பல்லாயிரம் மக்கள் அதன் நிழலில் சுகத்தைப் பெற உதவும் பெருவிருட்சமாக உள்ளது.

யாழ் மாவட்ட சி. க கூ. சங்கங்களின் சமாசத்தின் நோக்கம் யாதெனில் கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கிணங்க அதன் உறுப்பினர்களுக்கு ஏற்ற பொருளாதார, சமூக கலாசார தேவைகளை நிறைவு செய்வதும், உறுப்பினர்களுக்கிடையில் சிக்கனம் இருவயினொத்த உதவி, தன்னுதவி தொடர்பாக கருத்துக்களையும் பிரயோகத்தையும் விருத்தி செய்வதும், உறுப்புரிமைச் சங்கங்களின் நடவடிக்கைகளை இலகுவாக்குவதும், உறுப்புரிமைச் சங்கங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதும், உறுப்புரிமைச் சங்கங்களின் ஒருமித்த கருத்துக்களை வெளியிடுவதற்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தலும், உறுப்புரிமைச் சங்கங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வியாபார நடவடிக்கையில் ஈடுபடுதலும், கூட்டுறவுச் சட்டத்திற்கும், விதிகளுக்கும், சமாசத் துணைவிதிக்கும் அமைவாக மாவட்டத்தின் நானாவித அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் உறுப்புரிமைச் சங்கங்களை பிரதிநிதிப்படுத்தலும் அதனூடே ஒரு கூட்டுறவுச் சமூகத்தினை உருவாக்குவதுமாகும்.

சிக்கனமே சிறந்த செல்வம் என்னும் விருது வாக்கியத்தைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்ட சி க. கூ. சங்கங்களின் சமாசம் தனது அங்கத்தவர்களிடையே சேமிப்பு பழக்க வழக்கத்தை ஊக்குவித்து அத்தகைய சேமிப்பினால் திரட்டிய நிதியிலிருந்து அங்கத்தவர்களின் தொழில் வாய்ப்பிற்கும், வருவாய்க்கும் வேண்டிய மூலதனத்தைப் பெற்றுக்கொள்ள இலகு கடன் அடிப்படையில் அவர்களுக்கு வழங்கி அவர்களுக்கென ஒரு சுயதொழில் வாய்ப்பினை உருவாக்குவதுடனும் அத்தொழில் வாய்ப்பின் மூலம் கிடைக்கப்படும் வருமானத்தினால் கடனை சிறுக, சிறுக அடைப்பதுடன் அவரின் வாழ்க்கைத் தரத்தையும் அதிகரிக்கவும் உதவி புரிந்து அத்துடன் கிராம மட்டத்தில் சிறு வங்கி அமைப்பையும் உருவாக்கி அதன் மூலமும் அங்கத்தவர்களுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கி வந்துள்ளது. மக்களுக்காக மக்களினால் ஆரம்பிக்கப்பட்ட சி. க. கூ சங்கங்களின் வங்கி அமைப்பு இன்று மக்களுடனேயே ஒன்றிணைந்து மக்களுக்கே அதன் நற்சேவையை மேற்கொள்கின்றது. யாழ் மாவட்டத்தில் இன்று 80 கிராமிய சி க. கூ. சங்கங்களின் வங்கி அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. இவ்வாறு சி. க. கூ சங்கங்களின் சமாசமானது நல்வளர்ச்சி அடைவதற்கு சி. க. கூ. சங்க ஸ்தாபகர் அமரர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மாவட்டத்தின் சிறந்த கூட்டுறவு வங்கியாக எதிர்காலத்தில் மிளிர்ந்து இப்பிரதேசத்தின் மக்களுக்கு மேலும் நற்சேவை ஆற்ற வேண்டுமென்று இன்று 10ஆவது ஆண்டு தினத்தைக் கொண்டாடும் யாழ் மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தினை வாழ்த்துகின்றோம்.

1 9 8 2



1 9 9 2

### யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய சபைகள்

| | | |
|---|---|---|
| 1 | நெடுந்தீவு | பிராந்திய சபை |
| 2 | வேலணை | ,, ,, |
| 3 | ஊர்காவற்றுறை | ,, ,, |
| 4 | சங்கானை | ,, ,, |
| 5 | சண்டிலிப்பாய் | ,, ,, |
| 6 | உடுவில் | ,, ,, |
| 7 | தெல்லிப்பழை | ,, ,, |
| 8 | யாழ்ப்பாணம் | ,, ,, |
| 9 | நல்லூர் | ,, ,, |
| 10 | கோப்பாய் | ,, ,, |
| 11 | சாவகச்சேரி | ,, ,, |
| 12 | கரவெட்டி | ,, ,, |
| 13 | பருத்தித்துறை | ,, ,, |
| 14 | வடமராட்சி கிழக்கு | ,, ,, |

### யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

கூட்டுறவு இயக்கம் ஐக்கிய நாணய சங்கங்களின் தோற்றத்துடன் எமது நாட்டில் வேரூன்றத் தொடங்கியது. நாட்டிலேற்பட்ட பொருளாதார, சமூக அரசியல் காரணிகளால் காலத்திற்கு காலம் கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பு முறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன, இம்மாற்றங்கள் கூட்டுறவுஇயக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் நாட்டின் சமூக,பொருளாதார மேம்பாட்டில் இன்றும் ஒரு தனியிடம் இருந்து வருவதை மறுக்க முடியாது இந்த நிலைமை யாழ் மாவட்டத்திற்கும் பொருத்தம் உடையதாகும். யாழ் மாவட்டத்தில் கூட்டுறவு இயக்கம் பல துறைகளில் வியாபித்து முன்னணியிற் செயற்பட்டுள்ளது. இதற்கான முக்கிய காரணம் கிராமிய மட்டத்தில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாணய சங்கங்களும் அச்சங்கங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டுறவாளர்களும் ஆகும்,

யாழ் மாவட்டத்தில் எண்ணூற்றுக்கு அதிகமான ஐக்கிய நாணய சங்கங்களும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன. இச் சங்கங்கள் யாவற்றையும் பராமரிக்கும் மேற்பார்வை செய்யும் தாய்ச் சங்கமாக யாழ்ப்பாணம் மாவட்டச் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம் இருந்து வருகின்றது இச்சமாசம் 1982-03- 02ஆந் திகதியிற் பதிவு செய்ய பட்டதாகும் தற்போது 450 அங்கத்துவ சங்கங்கள இச்சமாச மூலம் பல்வகைக் கடன் திட்டங்களின் கீழ் அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகளைச் செய்து கொடுப்பதுடன் கிராமிய மட்டத்தில் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கி அமுல்படுத்தும் நிறுவனமாகவும் இருந்து வருகின்றது. கிராமிய மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும், கூட்டுறவு மீதான நம்பிக்கையையும் ஊட்டும் முகமாகப் பல வகைப் பயிற்சிகளையும், கருத்தரங்குகளையும் அதன் வெளிக்கள உத்தியோகத்தர் மூலமாக அமுல்படுத்துவதன் மூலம் கூட்டுறவு இயக்கம் மேலும் விரிவடைவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அமுலாக்கி வருகின்றது.

எதிர் வரும் 2ஆந் திகதி இச் சமாசம் தனது 10 ஆவது நிறைவு ஆண்டைக் கொண்டாட உள்ள இவ்வேளையில் சமாசத்தின்எல்லா அபிவிருத்தி முயற்சிகளும் திறம்பட நடக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்,

செ. லிங்கநாதன்
கூ, அ உ. ஆணையாளர்
(அபிவிருத்தி)
யாழ். மாவட்டம்

# சிக்கனமே சிறந்த செல்வம்

## ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும்

03006

[library stamp] யாழ்ப்பாணம்

# மகா சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம் மத்திய பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் கைலாய பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள தனது நிலையத்தில் மகா சிவராத்திரியைக் கொண்டாடுகின்றது. இன்று மாலை 5.45க்கு பகவானின் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் விழாவில் இராமநாதன் அக்கடமி விரிவுரையாளர் செல்வி பாக்கியலக்ஷ்மியின் வயலின், பண்ணிசைச் செல்வன் இரகானந்தனின் பாட்டு என்பனவற்றுடன் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. அதிகாலை நகர சங்கீர்த்தனத்துடன் விழா நிறைவெய்தும்.

★ ★

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு பழம் கிணற்றடி பாதாள வைரவர் தேவஸ்தானத்தில் இன்று சிவராத்திரி விழா நடைபெறுகிறது. சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

★ ★

வண்ணை சந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் சிவராத்திரி விழா இன்றிரவு நிகழும்.

இவ்வாலயத்தால் நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப் பரீட்சையில் பரிசு பெற்றோருக்கான பரிசில்களை யாழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் க. துரைசிங்கம் அங்கு வழங்குவார்.

சமயச் சொற்பொழிவுகள், கந்தபுராண பாராயணம், அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் திருமுறைப் பஜனை என்பனவும் இடம்பெறும்.

★ ★

நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள பிரசாந்தி நிலையத்தில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை இரவு அகண்ட நாம பஜனை நடைபெறவுள்ளது.

★ ★

ஈச்சமோட்டைக் கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் இன்று மகா சிவராத்திரி உற்சவம் சிறப்பாக நடைபெறவுள்ளது.

கவியரங்கும் இடம்பெறும்.

★ ★

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தினர் விநாயகர் ஆலயத்தில் இன்று சிவராத்திரி தினத்தை சிறப்பாக கொண்டாடவுள்ளனர். நான்கு ஜாம பூஜைகள், மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன மேற்படி ஆலயத்தில் இடம்பெறும்.

★ ★

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் இருக்கும் சிவன் கோவிலில் இன்று சிவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. விசேட நிகழ்ச்சியாக திருமுறை ஓதுதல் இடம்பெறும். (47)

## மத்திய அரசின் பட்ஜெட்;
# ‘உலகவங்கிக்கு விசுவாசத்துடன் கீழ்ப்படிந்து தயாரிக்கப்பட்டது’

மத்திய அரசின் புதிய பட்ஜெட்டைத் தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கண்டித்துள்ளார்.

“உலக வங்கியின் நிபந்தனைக்கு மத்திய அரசு உடன்பட்டது போல சில அறிகுறிகள் இந்தப் பட்ஜெட்டில் தென்படுகின்றன” என்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

‘இந்தப் பட்ஜெட் எனக்கும் பிடிக்கவே இல்லை’ என்று பிரபல பத்திரிகை ஆசிரியர் என். ராம் கூறியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் முரளி மனோகர் ஜோஷி ‘பணவீக்கத்தையும், விலையுயர்வையும் கட்டுப்படுத்த இந்த பட்ஜெட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை’ என்றார்.

‘இந்தக் கடுமையான பட்ஜெட் ஏழையை மேலும் ஏழையாக்கிவிடும் ஜனதாதள் தலைவரும், முன்னாள் பிரதமருமான வி.பி. சிங் கூறியுள்ளார்.

‘உலக வங்கியின் சொற்படி இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது’ என்றும் அவர் சொன்னார்.

‘உலக வங்கியும், சர்வதேச செலாவணி நிதியமும் விதித்த நிபந்தனைகளுக்கு விசுவாசத்துடன் கீழ்ப்படிந்து பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது’ என்று தேசிய முன்னணித் தலைவர் என்.டி ராமராவ் கண்டித்துள்ளார்.

‘பட்ஜெட் கவர்ச்சியானதுதான் ஆனால் 5 சதவீத மக்களுக்காகத்தான் அது தயாரிக்கப்பட்டிருக்கிறது’ என்று முன்னாள் பிரதமர் சந்திரசேகர் கூறியுள்ளார்.

# சமாதானப் பேச்சு இழுபறி நிலையில்!

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சு இழுபறி நிலையில் இருப்பதாக அறியவருகிறது. பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விரும்பாத இஸ்ரேல் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டது உலகை ஏமாற்றவே என்று கருத்துத் தெரிவித்த சிரியா நாட்டுக் குழுவின் தலைவர் அமெரிக்காவோ அல்லது ரஷ்யாவோ இதில் தலையிட்டு இவ் விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி இட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அதிமுக்கிய பிரச்சினைகளைப் பேசுவதற்கு இஸ்ரேல் பின்நிற்பதாக ஜோர்டான் குழுத்தலைவர் தெரிவித்தார்.

அமெரிக்காவோ அல்லது ரஷ்யாவோ இப்பிரச்சினையில் தலையிடுவதை விரும்பாத இஸ்ரேல் தாம் சமர்ப்பித்த தன்னாட்சி உரிமை யோசனையைப் பரிசீலிக்கும்படி பாலஸ்தீனியர்களை கேட்டிருப்பதாக ஏஜென்சி செய்தி தெரிவித்தது.

# சங்கானையில் அறுவடைவிழா

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கெயர் பயனாளிகளுக்கான நெல் அறுவடை விழா சங்கானை கிழக்கு முருகமூர்த்தி கோவிலடியில் சங்கத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கெயர் ஸ்தாபனப் பிரதிநிதி திரு எம். கனகரத்தினம் “சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரிவு விவசாயிகள் கெயர் ஸ்தாபனத்திடமிருந்து விதைநெல்லைப் பெற்று 98 வீதமான அறுவடையைப் பெற்றுள்ளமை. கெயர் ஸ்தாபன உதவித் திட்டத்திற்கு மதிப்பளித்துள்ளது” என்றார்.

மாவட்டக் கூட்டுறவுச் சபைச் செயலாளர் திரு. க. சிவசுப்பிரமணியம், திரு ஆ. இராசரத்தினம், மூ வாமதேவன், எஸ் கதிரமலை, இணைப்பு உத்தியோகத்தர் திரு. சு சிதம்பரநாதன், பொது முகாமையாளர் திருமதி ப. மகேஸ்வரன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (18)

# வவுனியாவுக்குப் புதிய அரசாங்க அதிபர் நியமனம்
## முன்னையவர் திடீர் மாற்றம்

வவுனியாவின் புதிய அரசாங்க அதிபராக எம். திலை நடராஜா கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் வட கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சின் மேலதிகச் செயலாளராகக் கடமையாற்றியவர்.

முன்னைய வவுனியா அரசாங்க அதிபர் திடீர் மாற்றம் செய்யப்பட்டே இப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கொழும்பில் விபுலானந்தர் தமிழ் மகாவித்தியாலயம்

விபுலானந்தர் தமிழ் மகா வித்தியாலயப் பெயர் சூட்டு விழாவும், சிலை திறப்பு வைபவமும் நேற்று கொழும்பில் நடைபெற்றன.

இதனையொட்டி சபாநாயகர் ஆசியும், கைத் தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி தாழ்த்தும் தெரிவித்தனர்.

# சுகாதாரப் பிரிவு திடீர் சோதனை

யாழ். நகரப் பகுதியில் உள்ள உணவு தயாரிக்கும் நிலையங்கள், தேநீர், குளிர்பான சாலைகள் ஆகியன யாழ் மாநகரசபை சுகாதாரப் பிரிவினரால் திடீர்ப் பரிசோதனை செய்யப்பட்டன.

இப் பகுதிப் பொது சுகாதாரம் பரிசோதகர் து. மகாதேவா தலைமையிலான ஐந்து பேர் கொண்ட குழுவே இத் திடீர்ப்பரிசோதனையில் ஈடுபட்டது. (28)

# கந்தப்புராணம் கூறும் சிவராத்திரி வரலாறு



மகாசிவராத்திரி வரலாறாகப் பல இருப்பினும் கந்தப் புராண அடிமுடி தேடிய வரலாறே மிகத் தெளிவாக இவ் அதி முக்கிய வழிபாட்டுத் தினத்தை இயம்புகிறது.

தக்கன் பிரமாவின் மக்களில் ஒருவன் இவன் சூரபன்மனைப் போன்று சிவபெருமானின் அருளால் உலகங்கள் எல்லாவற்றையும் ஆளுங்காலத்தில் பெருங் கொடுமைகளைச் செய்தான் இது மாத்திரமல்லாமல் தன் மகளாகிய உமையம்மையாரை இகழ்ந்தான் எல்லாவற்றிற்கும் மேலாகச் சிவபெருமானுக்குக் கொடுக்க வேண்டிய பாகத்தைக் கொடாது தேவர்களையும் ஏமாற்றிக் கொடிய யாகத்தைச் செய்தான்.

கருணைக்கடலாகிய சிவபெருமான் சூரபன்மனுக்கும் அனுக்கிரகஞ் செய்தார், தக்கனுக்கும் அனுக்கிரகஞ் செய்தார் துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலன மூர்த்தியாகிய பெருமான் துஷ்டரைத் தண்டிக்கவேண்டி சூரபன்மனை முருகக் கடவுளால் தண்டித்தது போன்று தக்கனையும் வீரபத்திரக் கடவுளால் தண்டித்தார்.

தக்கன் செய்த யாகத்தை அழித்துத் தக்கனுக்கு ஆட்டுக்கடா முகம் உண்டாகும்படி செய்தருளினார், இது கந்த புராணத்தில் யாக சங்காரப் படலத்துள் செவ்வனே சொல்லப்பட்டுள்ளது.

இச்சங்காரத்தின் பின் தக்கனுடைய தந்தை பிரமா தக்கனுக்குச் சொல்லியவற்றை அழகாகக் கந்தப்புராணத்தில் பார்க்கிறோம்.

உணர்வு பெற்றவனாகிய தக்கன் இப்போது தந்தையிடம் சிவநிந்தனையின் பேறும், சிவ வந்தனையின் பேற்றையும் கேட்டுத் தெளிகின்றான் இப்போதுதான் தக்கன் எப்படியாகத் தானும் திருமாலும் அகந்தையால் பெற்ற பெரும் அனுபவத்தைச் சொல்கின்றார். சிவ பரம்பொருள் சோதிப்பிழம்பாகத் தோற்றி பிரமாவிஷ்ணுவை ஈடேற்றுகின்றார். இச் சோதி தோற்றிய நாளே சிவராத்திரியாகும்.

சிவபெருமான் சோதியாய் தோற்ற அடியையும், முடியையும் தேடி பிரமா விஷ்ணு செல்லுகிறார்கள். பிரமா அன்னப்பட்சி வடிவெடுத்து முடியைத் தேடினார் திருமால் பன்றியுருவெடுத்து அடியைத் தேடினார். காணவில்லை அகந்தை நீங்கப் பெற்றுச் சோதியினிடத்தே சரணடைகிறார்கள் அந்நேரத்தில் பெருமான் அவர்க்கு வேண்டிய அருள்புரிந்து சோதியானது பெரிய லிங்கவடிவாயிற்று.

இத்திவ்விய காலமே சிவராத்திரிக் காலமாகும். இக்காலத்தில் வேண்டிய விதிப்படி சிவவழிபாடு செய்வோர் வேண்டிய சித்திகளைப் பெறுவர்.

நா. கனகரத்தினம்
சைவ சித்தாந்த பண்டிதர்

# ★ மன்னார் தமிழ் - முஸ்லிம் அகதிகளைக் கவனிக்க 33 அதிகாரிகள் நியமனம்

மன்னார் தமிழ் - முஸ்லிம் அகதிகளைக் கவனிக்க 33 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்திலிருந்தும் கற்பிட்டியிலிருந்தும் மன்னார் திரும்பும் தமிழ் - முஸ்லிம் அகதிகளது நலனைக் கவனித்து அவர்களை உபசரிக்கவென மன்னார் அரசாங்க அதிபர் இவ்வதிகாரிகளை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வகதிகளுக்காக முகாம்களும், வரவேற்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பயிற்சி வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

வெளிநாடுகளில் பட்டம் பெற்ற இலங்கை டாக்டர்களுக்கு இம்மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

கொழும்பு, பேராதனை, காலி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடங்களில் டாக்டர்களாகப் பட்டம் பெற்று வெளியேறியவர்களும் பயிற்சி வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜோர்ஜ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இவர்களுக்கும் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார். (06)

# விளையாட்டு மைதானம்

## வெற்றி தோல்வி இல்லை

கல்லூரிகளுக்கிடையே நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எதிர்த்து ஸ்ரான்லிக் கல்லூரி ஆடவுள்ளது.

ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப் போட்டி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று ஸ்ரான்லிக் கல்லூரி கிரிக்கெட் பயிற்றுநர் எஸ் சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளில், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையேயான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

கொக்குவில் இந்து அணி முதல் இனிங்ஸில் கிருபாகரன் பெற்ற 48 ஓட்டங்கள் உட்பட 158 ஓட்டங்கள், இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கற் இழப்பிற்கு 102 ஓட்டங்கள்.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸில் 9 விக்கற்றுகள் இழப்பிற்கு 309 ஓட்டங்கள். சென்ஜோன்ஸ் கல்லூரி அணித் தலைவர் மகாலிங்கம் காண்டீபன் ஆட்டம் இழக்காமல் 105 ஓட்டங்கள்.

### பாடுமீன் வெற்றி

காண்டீபன் இதற்கு முன் கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கெதிரான போட்டியிலும் ஆட்டம் இழக்காமல் 103 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது

யாழ். உதைபந்தாட்ட லீக், அதன் முன்னை நாள் தலைவர் கலாநிதி யே. பி. சி, பிலிப்ஸ் ஞாபகார்த்த கிண்ணத்திற்காக நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் ஓர் அங்கமாக, நேற்று முன்தினம் சென் அந்தனீஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் அணி அதனை எதிர்த்து ஆடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை 5:0 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

ஆட்ட ஆரம்பத்தில் வெகு விறுவிறுப்பாக ஆடிய அரியாலை அணி நேரம் போகப்போக சோர்ந்து போனதினாலும், தொடக்கத்தில் கோல்போடக் கிடைத்த வாய்ப்புகளை நழுவ விட்டதினாலும் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று றூபன், மகேந்திரராஜன் ஆகியோர் சிறப்பாக ஆடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

நடுவராக ஏ.தேவராசாவும், உதவி நடுவர்களாக ஜீ எம் செபஸ்தியாம்பிள்ளை, எம்.பிரான்சிஸ் ஆகியோர் கடமையாற்றினார்கள், (16)

### வருடாந்த போட்டி

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி லீலா சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். விடுதலைப்புலிகள் வடமராட்சித் தளபதி திரு. செல்வம், திரு மிரேஸ், பருத்தித்துறை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தேவிகா, பருத்தித்துறைக் கொத்தணி அதிபர் திரு சி.பொ பாலசிங்கம் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்,

"பாக்கு" இலலம் 271 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் 'மேக்கறெரயிட்" இலலம் 231 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன திருமதி செல்லத்துரை பரிசில்களை வழங்கினார். (11)

# ஆப்கான்; இரு மாதங்களின் பின் கெரில்லாக்கள் றொக்கெட் வீச்சு

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் கெரில்லாக்கள் நடத்திய றொக்கெட் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

காபூல் நகர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது-

120 பேர் காயமுற்றதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன-

நிலத்திலிருந்து நிலத்துக்குப் பாயக்கூடிய இந்த றொக்கெட் காபூலில் பங்குச் சந்தை ஒன்றின் மீது வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது-

சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின்னர் தலைநகர் காபூல் மீது றொக்கெட்தாக்குதல் நடத்தக் கெரில்லாக்கள் தொடங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## சபாநாயகத்துக்கு பதவியுயர்வு கிடைத்தது

கல்வி, உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவுக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ, சபாநாயகம் கல்வி, உயர்கல்வியமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்,

கடந்த மாதம் 27 ஆம் திகதி இந்நியமனம் கல்விச் சேவை ஆணைக்குழுவினால வழங்கப்பட்டது.

## சிங்களவர் நடத்தும் தமிழ்விழா

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் சிங்களவர்கள் நடத்தும் தமிழ் விழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்து விட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏரிக்கரை ஏடான 'தினகரன்' இது குறித்து நேற்று ஆசிரியத் தலையங்கம் எழுதியுள்ளது,

# சிறிய செய்திகள்

### பாகுபாடு?

வட்டுக்கோட்டைக் கொத்தணிப் பிரிவின் பாடசாலை நூல் நிலையங்களுக்கு நூல்களை விநியோகம் செய்வதில் பாகுபாடு காட்டப்பட்டு வருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினர் ஒவ்வொரு பாடசாலை நூல் நிலையங்களுக்கும் வழங்கப்பட வேண்டிய புத்தக விவரங்களைத் தயாரித்து கொத்தணிக்கு அனுப்பி வைத்த போதும் கொத்தணியினர் தமக்கு விரும்பிய பாடசாலைகளுக்குக் கூட்டியும் விரும்பாத பாடசாலைகளுக்குக் குறைத்தும் விநியோகித்து வருவதாகக் கூறப்படுகிறது. (18)

### அறிவிப்பு

மகாசிவராத்திரி தினத்துக்கு மறுநாள் செவ்வாய்க்கிழமை வர்த்தக விடுமுறையாதலால் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருக்கும் என நல்லூர் பிரதேசவர்த்தகர்சங்கம் அறிவித்துள்ளது. (41)

### அதிஉயர் ஆஞ்சநேயர் சிலை

32 அடி உயரம் கொண்ட ஒரே கல்லில் செதுக்கப்பட்ட ஆஞ்சநேயர் சிலை ஒன்று சென்னையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

850 தொண் நிறையுள்ள இச்சிலை 6 அடி உயரமும் 10 அடி அகலமும் கொண்ட பீடத்தில் கிரெய்னினால் தூக்கி வைக்கப்பட்டதாகவும் மாருதி பக்த சமாஜத்தின் 12 மாத முயற்சியினால் இது நிறைவேறியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### பணி துரிதம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்திற்கு அலுவலக உதவியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதை அடுத்து அங்கு பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

### இன்று

யாழ் மாவட்டத்தில உள்ள சித்திர ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை ஒன்று இன்று திங்கட்கிழமை யாழ்; இந்துக் கல்லூரியில நடைபெறவுள்ளது-

### அறிவுறுத்தல்

கிராம அபிவிருத்திச் சங்கங்களில் தலைவராகக் கடமை புரிபவர்களின் சேவைக் காலம் ஒரு வருடத்துக்கு உட்பட்டதாகும் என்று கிராம அபிவிருத்தி அமைச்சு சகல கிராம அபிவிருத்தி அதிகாரிகளுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது

இதேபோல இரண்டாம் வருட ஆண்டுப் பொதுக் கூட்டத்தின்போது தகுதி உடைய ஒருவர் இல்லாதவிடத்து மீண்டும் அவரையே தெரிவு செய்யலாம் என்றும், மூன்றாவது வருடத்தில் கட்டாயமாக வேறு ஒரு தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும் அச்சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது. (06)

### அன்பளிப்பு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வியோகக் கழகத்தினர் நவாலி மூதலியார் மகேசன் இல்லத்தில் தங்கியுள்ள பிள்ளைகளுக்கு முதலுதவிப் பெட்டி பாடசாலை உபகரணங்கள் முதலானவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்

இந்த இல்லத்தில் தங்கியுள்ள பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்தச் செய்வதற்காகவே இக்கழகத்தினர் கொப்பி, பென்சில், பேனை முதலானவற்றை வழங்கியுள்ளனர்,

கடந்த வெள்ளிக்கிழமை இந்த இல்லத்திலுள்ள பிள்ளைகளுக்கு இக்கழகத்தினரால் மதிய உணவு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (18)

# ★ சர்வதேச மன்னிப்புச் சபை பாக்.கூடிய படைப்பல பயன்பாடு பற்றிக் கண்டனம்

காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அருகே சென்ற மாதம் 16 காஷ்மீரியர்களைப் பாகிஸ்தான் படைகள் கொன்ற சம்பவத்தை சர்வதேச மன்னிப்புச்சபை கண்டித்துள்ளது.

இக் கண்டனத்தை அது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீபிற்குத் தெரிவித்துள்ளது,

பாகிஸ்தானியப் படைகள் சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதற்கான நிலையைத் தாம் அங்கீகரிப்பதாகவும் ஆனால் அளவுக்கு மிஞ்சிய படைபலப் பயன்பாட்டைக் கண்டிப்பதாகவும் மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது,

## இந்தியா பின்நோக்கி

இந்தியா நாளுக்கு நாள் பின் நோக்கிக் கொண்டு போகிறது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்று கூறுகிறது 160 நாடுகளின் முன்னேற்றம் பற்றி உலக நாடுகள் சபை ஓர் அறிக்கை தயாரித்திருக்கிறது. அதில் முதலிடம் வகிபது ஜப்பான், மேற்கு ஆபிரிக்காவில் உள்ள சைரலீன் என்ற நாடு கடைசி இடத்தில் அமெரிக்காவிற்கு 4 ஆவது இடம்.

ஆனால் அந்தப் பட்டியலில் இந்தியா 123 ஆவது இடத்தில் இருக்கிறது. இதில் இன்னும் ஒரு ஆச்சரியம் என்னவென்றால் இலங்கைக்கு 75 ஆவது இடம், மாலைதீவுக்கு 93 ஆவது இடம். அதே சமயம் பாகிஸ்தானுக்கு 120 ஆவது இடம் மேலும் அவ்வறிக்கையில் ஆசியாவில் 70 கோடிமக்கள் வறுமையில் ஒரு நேர உணவிற்குக் கூட வசதியின்றி வாடுகிறார்கள், அவர்களில் பாதிப்பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். (16)

## இரவு வேளையில் நிகழும் நெல் அறுவடை

பூநகரியில் உள்ள செட்டியகுறிச்சி பகுதியில் இருந்த இராணுவத்தினர் தற்போது கறுக்காய் தீவு கடற்கரையோரமாக தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால செட்டி யகுறிச்சிக்கு மக்கள் இரவு நேரங்களில சென்று தமது பெரும்போக நெற்செய்கையை அறுவடை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (47)

## நேற்று முதல் 25 சதவீதம் மின்கட்டணம் அதிகரிப்பு

இலங்கை மின்சாரசபை நேற்றுமுதல் மின்சாரத்திற்கு மேலதிகக் கட்டணம் அறவிடத்தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

நீர்த் தேக்கப் பகுதிகளில் வறட்சி நிலவுவதால் அனல் மின்சாரத்திற்குத் தேவையான எரிவாயு பாவிக்கப்படுவதாலேயே மேலதிகமாக 25 சத வீதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து அனல் மின்சாரத்தைப் பெறுவதற்கென்று 90 கோடி மின்சாரசபை செலவிட்டுள்ளது.

## வன்னிக் காட்டில் இராணுவ நடவடிக்கை தொடர்கிறதாம்

வன்னிக்காட்டில் இராணுவ நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கபட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

நவீன தாங்கிகள் சகிதம் தற்போது வன்னிக்காட்டில் மீண்டும் 'வன்னிவிக்கிரம III, நடவடிக்கை தொடர்வதாக அவர் தெரிவித்தார்.

பாவற்குளம் இராணுவ முகாமிலிருந்து சின்னதம்பனைப் பகுதியை நோக்கி தற்பொழுது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன:

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்



# ரஞ்சன் கொலை; இருவர் மீது கொழும்பில் வழக்குத் தாக்கல்

முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவை கொலை செய்தனர் என்றும், கூட்டுப் படைத் தலைமையகம் குண்டு வெடிப்பின் மூலம் இராணுவத்தினரைக் கொன்றனர் என்றும் இருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அருணாசலம் சுரேந்திரன் அல்லது சனிர் என்பவர் மீதும் சாவகச்சேரியைச் சேர்ந்த தயாபரன் அல்லது ஜெயநாதன் அல்லது றொபின் என்பவர் மீதும் குற்றம் சாட்டி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்றும் இச் செய்திகள் கூறின.

## யாழ் மாவட்ட சிக்கன கடன்..

திரு.ச.ஞானப்பிரகாசம் அவர்களும், திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும் மற்றும் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை இயங்கி வந்த இயக்குனர் சபையினரும் சி. க. சங்கங்களின் ஒத்துழைப்பும் சமாசத்தில் கடமையாற்றிய ஊழியர்களின் அயராத சேவைமனப் பான்மையுடனான உழைப்புமே என்று கூறினும் அவை மிகையாகாது.

சமாசமானது தனது வளர்ச்சிக்கேற்ப அங்கத்தவர்களுக்கு தேவையெனக் கருதும் பல திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் அங்கத்தவர்களுக்கு நிதி உதவியும் புரிந்து வருகின்றது. சாதாரண கடன், சுயமுயற்சிக்கடன், விவசாயக் கடன், திட்டக் கடன், உயர் கல்விக் கடன், வீடமைப்புக் கடன், வறியமக்கள் கடன், வெளிநாட்டுக் கடன், (HIVOS) வியாபாரக் கடன், வீடமைப்புக் கடன், ஊறுகாய்க் கடன், பண்டிகைக் கடன் எனப் பல வழிகள் வாயிலாக கடன்களை வழங்குகின்றது. இவ்வாறான நிதிகளை வழங்குவதற்கு சமாசம் ஆனது பின்வரும் வழிகள் மூலம் நிதிகளைத் திரட்டி வருகின்றது.

மாதாந்த சேமிப்புத் திட்டம், நிலையான வைப்புத் திட்டம், மாணவர் சேமிப்புத் திட்டம், பரிசுநிதிய சேமிப்புத் திட்டம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்படும் கடன் திட்டம், ''கிவோஸ்'' எனப்படும் நெதர்லாந்து நிறுவனத்திடமிருந்து இலங்கை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கசம்மேளனத்தின் மூலம் பெறப்பட்ட நிதி ஆகியவற்றின் ஊடாகவே பெறப்படுகின்றது. இவற்றோடு மட்டும் நின்றுவிடாது மரணசகாய நிதித் திட்ட மூலமும் அங்கத்தவரிடமிருந்து மாதாந்த சந்தாவாக சிறு தொகையைப் பெற்று இழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவரின் பின்னுரித்தாளிக்கு நன்கொடை வழங்கும் திட்டமும் செயற்படுத்தப்படுகின்றது. மேலும் தனித்து நிதி திரட்டுவதோடல்லாமல் அங்கத்தவர்களுக்கு வேண்டிய கூட்டுறவுக் கல்வியும், பொருளாளர் பயிற்சியும், தலைமைத்துவ பயிற்சிகளும், மாற்றுமுகவர் பயிற்சிகளும், மகளிருக்கான பயிற்சிகளும், சமாச கல்விப் பிரிவு நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. எமது பிரதேசத்திலுள்ள மறைந்து இருக்கும் கலைகளை வெளிக்கொண்டு வந்த பிரபல்யப்படுத்தும் வசதிகள் சங்கங்கள் மூலமும், பிராந்தியசபைகள் மூலமும், யாழ்மாவட்டத்தின் சமாசத்தின் மூலமும் தவறாது மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. சி. க. கூ. சங்க அமைப்பானது தனிநபர் ஒருவருடன் தொடங்கி உலக ரீதியான அமைப்பு வரையில் தொடர்புடைய விரிவாக்கம் கொண்டதாகும். இச் சங்கிலித் தொடர்பு தனிநபர், சி. க. கூ. சங்கம், சங்கங்களின் கொத்தணி அமைப்பு. பிராந்திய சபை அமைப்பு. மாவட்ட சமாசம், தேசிய மட்ட சம்மேளனம், ஆசிய கடன் வழங்கு சம்மேளனம் (A C C U). உலக கடன் வழங்கு சபை (WOCCW) என்ற கோர்வையில் இணைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் சமாசத்தின் உள் அமைப்பாக தற்போது 44 கொத்தணி அமைப்புகளும், 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 14 பிராந்திய சபைகளும் உள்ளன. இந்த சமாசத்தில் இயக்குனர் சபையாக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒவ்வொருவர் தெரிவு செய்யப்படுவர். ஒருவர் மாவட்ட ரீதியில் பொதுப் பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டு மொத்தம் 15 இயக்குநர்களைக் கொண்ட சபையாகச் செயற்படுகின்றது. இச்சபையில் தற்போது திரு ச. முருகநேசன் அவர்கள் தலைவராகவும், திரு. க. மகாதேவன் அவர்கள் உப தலைவராகவும் நற்பணியாற்றி வருகின்றனர் இவர்களின் காலத்தில் சமாசம் நிர்ணயித்த இலக்குகளை வெற்றிகரமாக போற்றப்படும் தன்மையை அடைந்து வீறுநடை போடுகின்றது. இந்த மேன்மையில் சமாசத்தில் தங்களை அர்ப்பணித்து கடமையாற்றும் உத்தியோகத்தர்களினது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எதிர்கால வளர்ச்சிக்கென ஊழியர்களின் பணியுடன் 44 மாற்று முகவர்கள் என்னும் தொண்டர்களின் செயற்பாட்டினாலும் ஆயிரக்கணக்கான சி. க. கூ சங்க கௌரவ சேவையாளர்களின் அயராத உழைப்பினாலும் விரைவில் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் கனவின் கனியாக யாழ் மாவட்ட சி. க. கூ. சங்க சமாசமானது யாழ் மாவட்டத்தில் நற்பயன் அளிக்கும் சிறந்த கூட்டுறவு வங்கியாக உதயமாகிப்பிரகாசிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஒரு தசாப்த கால நிறைவில் சிறப்பான சேவையாற்றி பெருமை பெறும் இந்த நற்பணி மேன்மேலும் நானிலம் போற்ற ஞாலம் மீது நலிவுறாத ஒளியாக ஞாயிறுபோல் பிரகாசித்து வளர்ந்து நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

## ஈராக்குக்கு ஐ. நா. எச்சரிக்கை

# வளைகுடாப்போர்; தீர்மானங்கள் மீறப்படின் கடும் விளைவுகள்!

வளைகுடாப் போர்த் தீர்மானங்களை ஈராக் மீறுமேயானால், கடுமையான விளைவுகள் ஏற்படக்கூடுமென ஐ நா. பாதுகாப்புச் சபை ஈராக்கை எச்சரித்துள்ளது,

கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய தனது கூட்டத்தில வளைகுடாப் போரை நிறுத்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளது பற்றி ஈராக் உடனடியாகத் தன் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும் என சபையால கோரப்பட்டது,

நெடுந்தொலைவு ஏவுகணை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சாதனங்களை அழிப்பதற்கான காலக்கெடுவை நிறைவேற்ற ஈராக் தவறுமேயானால எழும் நிலை குறித்து ஆராயவே இக் கூட்டம் நடைபெற்றது,

இதற்கிடையில ஈராக்கிலுள்ள ஐ. நா. ஆயுத மேற்பார்வைக் குழு விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகின்றது,

## ஓவியப் போட்டி

யாழ் கல்வித்திணைக்களம் யாழ் மாவட்டத்தில் உள்ள ஆறு கோட்டக்கல்வி அலுவலகப் பிரிவுகளிலும் ஆசிரியர்களுக்கான 'ஓவியப் போட்டிகளை' மார்ச் மாதம் 2 ஆம் திகதி நடாத்தவுள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள சித்திர உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு எம், சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்

கல்விக்கோட்டங்கள் ரீதியாகப் பின்வரும் பாடசாலைகளில இந்த ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டிகள் நடைபெறுகின்றன

வடமராட்சி கோட்டம் - வேலாயுதம் மகாவித்தியாலயம் வேலணைக் கோட்டம் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயம் யாழ்ப்பாணக் கோட்டம் யாழ் இந்துக் கல்லூரி சாவகச்சேரி கோட்டம் சாவகச்சேரி மகளிர் வித்தியாலயம் மருதனாமடம் கோட்டம் இராமநாதன் கல்லூரி பண்டத்தரிப்பு கோட்டம் பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி 11

## ராணுவத்தின் பிடியில் இவர்கள்

வலி வடக்கு பகுதியில் 70க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இராணுவத்திடம் சிக்குண்டு இருப்பதாக அறிய வந்தது

## மகளிர் தினம்

வடமராட்சி உழைக்கும் மகளிர் நிறுவனம் இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் எதிர்வரும் 8-ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்றது.

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவிலே யாழ் அரச அதிபர் திரு. கே மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

இவ்விழாவிலே வன்செயல்களில் பாதிப்புக்குட்பட்ட பெண்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கைப்பணிப் பொருள்கள். உணவு உற்பத்திப் பொருள்கள் அடங்கிய விற்பனைப் பொருள் கண்காட்சியும் நடைபெறவுள்ளது 11

## விற்பனையில் சாதனை

அமெரிக்க ஓவியரும் இயற்கை ஆராய்ச்சியாளருமான ஜான் ஜேம்ஸ் ஆபென் என்பவர் 1820 முதல் 1830 ஆண்டு வரையிலான காலத்தில் பேட்ஸ் ஒவ் அமெரிக்க (Birds of America) என்ற புத்தகத்தை எழுதினார்

அண்மையில் இந்தப் புத்தகத்தின் முதல் பிரதியின் பக்கங்கள் ஒவ்வொன்றாக கனடாவில் டொரன்டோவில் ஏலத்தில் விற்கப்பட்ட பொழுது இந்தப் புத்தகத்தின் மொத்தப் பக்கங்களும் 7 கோடியே 87 இலட்சம் ரூபாய்க்கு விற்பனையாகியது 16

## கிளிநொச்சியில் வரட்சி நெற்செய்கை பாதிப்பு

சென்ற வருடம் போதிய மழையின்மையால் கிளிநொச்சியில் சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடும் வரட்சி காரணமாக இப்பகுதிகளில் இருக்கும் பல குளங்களில் நீர் வற்றியமையால் சிறுபோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கூடுதலான விவசாயிகள் சிறுதானிய பயிர்ச் செய்கையை மேற்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## கணித, விஞ்ஞான வினா விடை எழுத்துப் போட்டி

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான கணித, விஞ்ஞான வினா விடை எழுத்துப் போட்டிகள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். வி. மகேசவேல் தலைமையில் வெகு விரைவில் நடைபெறவுள்ளன

மூன்று பிரிவாக நடைபெறவுள்ள இப் போட்டியில் கொத்தணி மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்கள் போட்டியிடுவார்கள்

6, 7 ஆம் ஆண்டுப் பிரிவினருக்கு 30 கேள்விகளும் 8,9 ஆம் ஆண்டுப் பிரிவினருக்கு 40 கேள்விகளும் 10 11 ஆம் ஆண்டுப் பிரிவினருக்கு 50 கேள்விகளும் கேட்கப்படும் மாணவர்கள் ஒரு சொல்லில் விடை எழுதவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினால் நடத்தப்படும் இக் கணித விஞ்ஞான வினாவிடை எழுத்துப் போட்டியில் பத்துக் கொத்தணியிலிருந்தும் சுமார் நூறு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டுப் பிரிவிலும் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. 18

## பிறந்தநாள் 4 ஆண்டுக்கு ஒரு முறையே

இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி மொராஜி தேசாயின் 97 ஆவது பிறந்த தினத்தை யொட்டி ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்

அவரது பிறந்த தினம் பெப்ரவரி 29 ஆம் திகதி என்றபடியினால் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையே அவர் பிறந்த தினத்தை நினைவு கூருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# செய்தி உலகம்

## பின்லாந்து

பின்லாந்தில் பனிக்காலத்தில் பெரும்பாலும், பகலும் இரவு போல் இருளாகவே இருக்கும் அதனால் இங்கு 24 மணி நேரமும் மின்சார விளக்குகள் எரிந்து கொண்டே இருக்கின்றன. பனி கொஞ்சம் குறைவான காலத்தில் மாத்திரம் இந்நாட்டில் 6 மணித்தியாலங்கள் மட்டுமே சூரியனைக் காணலாம் இதனால் பின்லாந்தில் மற்ற எல்லாவற்றிலும் பார்க்க மின்சார வெளிச்சம் மிக அவசியமான தொன்றாகக் கருதப்பட்டு அந்நாட்டு வருவாயில் $\frac{1}{4}$ பங்கு மின்சார உற்பத்திக்காக செலவிடப்படுகிறது. இன்னும் ஒரு விசேடம் என்னவென்றால் கடந்த 10 ஆண்டு காலத்தில் மின்சாரம் ஒரு தடவையாவது தடைப்பட்டது கிடையாது என்று கூறப்படுகிறது.

## கெய்ரோ

உலகில் உள்ள பல்கலைக்கழகங்களில் மிகவும் பழைமை வாய்ந்த பல்கலைக்கழகம் கெய்ரோவில் இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் 'அல் அஜஹார்' பல்கலைக்கழகம் தான் கி,பி 967 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப் பல்கலைக்கழகம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அதன் 1025 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது,

## தென் ஆபிரிக்கா

பள்ளி இறுதி வகுப்புகளில் மாணவர்கள் தோல்வியுற்றாலோ அல்லது குறைந்த மதிப்பெண்கள் எடுத்தாலோ அதற்கு சம்பந்தப்பட்ட வகுப்பு ஆசிரியர்கள் தாம் தகுந்த காரணம் காட்டவேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுந்த காரணம் காட்டாத பட்சத்தில் அவர்களைத் தண்டிக்கும் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து உடனடியாக அதனைச் செயற்படுத்தவும் ஆரம்பித்திருக்கிறது.

### இங்கிலாந்து - பாக் போட்டி நிறுத்தம்

## அவுஸ்திரேலியாவிடம் இந்தியா ஒரு ஓட்டத்தால் தோல்வி

உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலியா பிரிஸ்பெனில் நேற்று நடைபெற்ற ஒரு போட்டியில் இந்தியாவை அவுஸ்திரேலியா ஒரு ஓட்டத்தினால் வெற்றி கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 237 ஓட்டங்களைப் பெற்றது இதைத் தொடர்ந்து கடும் மழை பெய்தது.

இதனால் அவுஸ்திரேலியா பந்துவீசுவதற்கு 3ஓவர்கள் குறைக்கப்பட்டு 47 ஓவர்கள் வீசப்பணிக்கப்பட்டது இந்தியாவுக்கும் அதன் வெற்றி இலக்கான 237 ஓட்டத்தை இரு ஓட்டங்களால் குறைத்து 235ஓட்டங்களாக்கப்பட்டது.

இந்தியா துடுப்பெடுத்தாடி 234 ஓட்டங்களையே பெற்றது இதன்மூலம் கடந்தமுறை உலகக்கோப்பையை பெற்ற அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது வெற்றியை இத் தொடரில் நேற்றுப் பெற்றது.

இதேவேளை அடிலேயிட்டில் நடைபெற்ற இங்கிலாந்து எதிர் பாகிஸ்தான் போட்டியில் பாகிஸ்தான் சகல விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்கள் பெற்றது இங்கிலாந்து 1 விக்கெட் இழப்பிற்கு 14 ஓட்டங்களைப் பெற்றபோது மழை பெய்ய ஆரம்பித்ததினால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு இரு அணிக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. 16

### குடிநீர் வசதி கேட்டு ஆர்ப்பாட்டம்

## 15 பெண்கள் காயம் 100 பேர் கைதானார்கள்

தமிழ்நாடு தேனி கம்பம் தொகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருமாறு சாலை மறியல் போராட்டம் செய்தவர்கள் மீது பொலிஸ் தடியடி பிரயோகித்ததில் 15 பெண்கள் காயமடைந்தனர். சுமார் 100 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

வெறுங் குடங்களுடன் வீதியில் ஆர்ப்பாட்டம் செய்த பெண்களைக்கலைக்க முயன்றபோதே மேற்படி சம்பவங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 3 மாதங்களுக்கு தேவையான மருந்துகள் கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு மேலும் மூன்று மாதங்களுக்குத் தேவையான மருந்து வகைகள் கொழும்பிலிருந்து கப்பலில் இம்மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் குமண கப்பலில் கொண்டுவரப்பட்ட மருந்து வகைகள் தற்போது லொறிகள் மூலம் யாழ்ப்பாணத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுவருவதாக யாழ் சுகாதார திணைக்கள வட்டாரம் தெரிவித்தது. 47

## மதிய உணவு முத்திரை விவரம் 3 ஆம் திகதிக்கு முன் தேவை

கடந்த ஆண்டு செப்டம்பர் அக்டோபர் நவம்பர், டிசம்பர் மற்றும் இவ்வாண்டு ஜனவரி மாதங்களுக்குரிய பாடசாலை மதிய உணவுமுத்திரைகளின் நிதிப்பெறுமதி விவரத்தை பாடசாலை அதிபர்கள் இதுவரை யாழ் சமூகசேவைப் பகுதிக்கு அனுப்பிவைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே நாளை 3 ஆம் திகதிக்கு முன்னதாக தத்தமது உதவி அரசாங்க அதிபர்களுக்கு விவரத்தை கொத்தணி அதிபர்கள் ஊடாக வழங்குமாறும், பிரதியை கோட்டத்திற்கு அனுப்பும்படியும் கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

## சுகாதாரப்பகுதிக் குழு கொழும்பு பயணமாகும்

யாழ் மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து பேச்சு நடாத்த சுகாதாரபகுதியினரின் உயர்மட்டக்குழு கொழும்பு செல்லவுள்ளது.

யாழ் மருத்துவமனைப் பணிப்பாளர் உட்பட உயர் அதிகாரிகள் இக்குழுவில் அடங்குவர். 07

ஹோட்டல்களை ..
செலுத்தாமல வெளியேறினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது, 06

ஜே. வி. பி ...
இதனிடையே சோமவன்ச அமரசிங்க பி, பி. ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் 1982 இல் எவ்வாறு எம்மீதிருந்த தடையை அப்போதைய அரசு நீக்கியதோ அதே போன்று இப்போதைய அரசும் எம்மீதான தடையை நீக்க வேண்டும் என குறிப்பிட்டார்.

ஜே வி. பி மீதான தடையை அரசு நீக்குமானால் மீண்டும் ஜே. வி. பி அடுத்த பொதுத்தேர்தலில் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது

அதிகாலை...
டைதீவில நிலை கொண்டிருக்கும் படையினர் 50கலிபர் தாக்குதலகளை மேற்கொண்டனர். 07

கருவேப்பங்குளம்—
சுமார் ஒரு மணி நேரம் மோதல்கள இப்பகுதியில் நடைபெற்றன இப்பகுதியில் புலிகளால ஏற்கனவே வைக்கப்பட்ட மிதிவேடியில் சிக்கி பலர் காலிழந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் பரவலாக விமானத் தாக்குதலும், ஷெல் தாக்குதலும் தொடர்ந்து கடுமையாக நடைபெற்றுவருகிறது-

இதேவேளை நேற்று வவுனியாவில் நடைபெற்ற மோதலில் 1 சிப்பாய் பலியானதாகவும் நால்வர் காயமடைந்ததாகவும் கூட்டுப் படைத்தலைமையகம் தெரிவித்தது 07

## வளைகுடா போரின்போது பாதிக்கப்பட்டவர்க்கு நட்டஈடு

1990 - ஆவணி மாதத்துக்கும் 1991 - பங்குனி மாதத்துக்குமிடையில் குவைத், ஈராக் நாடுகளிலிருந்து வெளியேறிய இலங்கையருக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஐக்கிய நாடுகள் சபை நட்டஈட்டு ஆணைக்குழு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

ஒவ்வொருதனி நபரும்2500 தொடக்கம் 4000 வரையிலான அமெரிக்க டொலரும், ஒரு குடும்பம் 5000 தொடக்கம் 8000 வரையிலான அமெரிக்க டொலரும் நட்டஈட்டுத் தொகையாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தம்மைப் பதிவு செய்திருக்கும் 83, 400 பேர் பதிவிலக்கம் பெற்றுள்ளனர் என்றும் இவர்கள் புதிதாகப் பதிவு செய்யத் தேவையில்லை என்று பணியகப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## இரு ஆஸ்பத்திரிகளில் கழிவுநீர் அகற்ற ஏற்பாடு

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கழிவு நீரை அகற்றுவதற்காக இரண்டு யந்திரங்களை வாங்குவதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

இதேபோல யாழ் மருத்துவமனைக்கும் கழிவு நீர் அகற்றும் யந்திரம் வாங்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டு வைத்தியசாலைகளுக்கும் 3 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 04

## சம்பளப்பணம் கொள்ளை முயற்சி தோல்வி

ஹெந்தளை குஷ்டரோக ஆஸ்பத்திரி ஊழியர்களின் சம்பளப்பணத்தை கொள்ளையடிக்க எடுத்த முயற்சி ஏமாற்றத்தில் முடிந்தது.

சம்பளப்பணத்தை மாற்றுவதற்கு காசோலையுடன் ஆஸ்பத்திரி அதிகாரிகள் வங்கிக்கு சென்று பணத்தைப் பெறாமல் திரும்பிச் சென்றதால் கொள்ளையர்கள் தமது முயற்சியை கைவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 06

## நோயாளிகளுக்கு கேள்விக் கொத்து

ஆஸபத்திரிசேவைகள் பற்றி பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்களைக் கேட்டறிந்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு புதிய முயற்சி ஒன்றை மேற்கொண்டிருக்கிறதாகத் தெரிவிக்கப்படுகிறது

மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளிகளிடம் கேள்விக் கொத்தொன்று வழங்கப்படும் அவர்கள் வெளியேறும் போது இப்படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும் இதில் தெரிவிக்கப்படும் ஆலோசனைகள் கவனத்திற்கு எடுக்கப்படுமாம்.

கொழும்பு சவுத் வைத்தியசாலையில பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் பலனளித்ததைத் தொடர்ந்து இதனை பரவலாக நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது

## புதிய கட்டிடம் திறப்பு

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய கட்டிடத்திறப்பு விழா வித்தியாலய அதிபர் திரு க. நல்லையா தலைமையில நடைபெற்றது.

இளைப்பாறிய அதிபர் திரு வ ஈஸ்வரம்பிள்ளை கட்டிடத்தைத் திறந்து வைத்தார்

சுழிபுரத்திலஉள்ள பேரூட் ஸ்தாபனத்தினரின் உதவியுடன் இப் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது, 18

## லியோ கழகத்தின் சேவை

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 'லியோ' கழகத்தினர் கடந்த வாரம் நவாலியில் உள்ள "முதலியார் மகேசன்" இல்லத்திற்குச் சென்று அங்கு தங்கியுள்ள பிள்ளைகளுக்கு கொப்பி, பென்சில், பேனை முதலான பாடசாலைப் பொருள்களையும் முதலுதவிப் பெட்டியையும் வழங்கியுள்ளதோடு மதிய உணவினையும் வழங்கினர் (18)

## பழைய நோட்டுக்கள் அதிகம்

யாழ்ப்பாணத்தில பழைய பண நோட்டுக்களை மாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சில வங்கிகளில பழைய நோட்டுக்களை மாற்ற முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்தது முதல பழைய நோட்டுக்களின் புழக்கம் யாழ் குடாநாட்டில அதிகரித்துள்ளதாகவும் வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன, 06

## வடக்கில் மாபெரும் கிரிக்கெட் போட்டி

வடக்கில மாபெரும் கிரிக்கெட் போட்டி யாழ் மத்திய கல்லூரி அணியினருக்கும் பரியோவான் கல்லூரி அணியினருக்குமிடையில இம்மாதம் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது,

இது இரு கல்லூரிகளுக்குமிடையில நடைபெறும் 88 வது போட்டியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு நாள்களிலும் காலை 9-30 மணி தொடக்கம் 12-30 வரையும், மாலை 1-10-ல இருந்து மாலை 5-45 மணி வரையிலும் நடைபெற உள்ளது, 15

## வவுனியா ரயில் நிலையத்தில் டிக்கற் கரும பீடங்கள்

வவுனியா ரயில் நிலையத்தில் பிரயாணிகளின் நெருக்கடியையடுத்து டிக்கற் விற்பனைக்கென இரு கவுண்டர்கள் திறக்கப்பட்டுள்ளன

ஒரு கவுண்டரில் மூன்றாம் வகுப்புக்கான டிக்கற்றும், மூன்றாம் வகுப்புக்கான வாரன்ட் டிக்கற்றுகளும், மற்றைய கவுண்டரில் முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்கான டிக்கற்றுகளும், அதற்குரிய வாரண்ட் டிக்கட்டுகளும் வழங்கப்பட்டு வருகின்றன

பயணிகள் தாமதத்தையும், சிரமத்தையும் தவிர்க்கும் பொருட்டு டிக்கற்றுகளுக்குரிய கட்டணத்தைக் கொடுத்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

வவுனியா-கொழும்பு மூன்றாம் வகுப்புக்கான கட்டணம் 43 ரூபா 50 சதமாகும்

பயணிகளின் வசதி கருதி டிக்கற் விற்பனை செய்யும் கவுண்டர்களிலும், பிரயாணிகள் கூடும் நுழை வாயில் மண்டபத்திலும் வவுனியாவிலிருந்து கொழும்பு, குருநாகல், மகோ ஆகிய இடங்களுக்கான கட்டண விவரம் எழுதி ஒட்டப்பட்டுள்ளது. 10

## கடந்த இரு மாதங்களில் 26 ஆயிரம் பேர் சிகிச்சை

பெப்ரவரி மாதம் யாழ் பொது மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவிலும், விடுதிகளிலும் மொத்தமாக 26 959 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்

வெளி நோயாளர் பிரிவில் 22, 276 பேரும் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு 4, 683 பேருமாக சிகிச்சை பெற்றனர்,

குழந்தைகள், பெரியவர்களில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் நெருப்புக்காய்ச்சல், நெஞ்சு சளி, செங்கமாரி வயிற்றோட்டம் வயிற்றுளைவு ஆகிய வருத்தங்களினால் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேரூட் நிறுவனம் அன்பளிப்பு

காரைநகர் தோப்புக்காடு நல்லொழுக்க வாலிபர் கழகத்தினரின் பெருமுயற்சியால காரைநகர் தோப்புக்காட்டைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு கொப்பி, பென்சில் றூளர். பேனா முதலான பல பொருள்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் வைத்து இப்பொருள்களைப் பேரூட் ஸ்தாபனத்தினர் கடந்த வாரம் விநியோகித்தனர்

இந்த நல்லொழுக்க வாலிபர் கழகத்தினரது வேண்டுகோளுக்கிணங்க கடந்த வருடத்தில் இந்த மாணவ மாணவிகளுக்கு சகாய விலையில் சீருடைத் துணிகள், கொப்பிகள் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது, 18

மருந்தித்துறையில்...
டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

மூளை, கற்கோவளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவத்தில சேத விவரம் தெரியவரவில்லை 10

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 02-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது